


**Population:**
8,460 (2000)
10,420 (2010)
12,800 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

**வசிப்பிடம்:** கி.பி. 1991 செய்யப்பட்ட ஓர் ஆய்வின் படி 7,000 சுயெயு மொழி பேசும் மக்கள் சீனாவில் உள்ளனர். இந்த எண்ணிக்கை கி.பி. 2000 ல் 8,460 ஆகவும் உயரும் என எதிர்பார்க்கப்பட்டது மற்றும் கி.பி. 2010 ல் 10,420 ஆக உயர்ந்திருக்கும்.

சுயெயுக்கள் மேற்கு சிசுவானின் பெரிய பகுதியை உள்ளடக்கிய கன்சு மாகாணத்தின் ஷின்லோங் (Xinlong) , யாச்யாங் (Yajiang) மற்றும் லீதாங் (Litang) மாவட்டங்களில் வசிக்கின்றனர். இவர்களுடைய இரண்டு முக்கியக் கிராமங்கள் யோலாஷி (Youlaxi) மற்றும் ஷி தோஷி (Xhi Tuoxi) ஆகியவனவாகும். கி.பி. 1990 ல் சுமார் 2,486 பேர் இங்கு வசித்தனர். லீதாங் பட்டணம் கடல் மட்டத்திலிருந்து 4,700 மீட்டர்கள் (15,400 அடிகள்) உயரத்தில் உள்ளது.

சுயெயு மக்கள் வாழும் பகுதி கி.பி. 1950 களில் சீனாவோடு இணைக்கப்படும் முன் கம் (Kham) மாநிலத்தைச் சேர்ந்ததாக இருந்தது. இப்பகுதி சீன ஆட்சியில் மிகக்கொடூரமான மனித உரிமை மீறல்களைக் கண்டுள்ளது. அநேக திபெத்தியர்கள் கொலை செய்யப்பட்டனர் அல்லது சிறையிலிடப்பட்டனர். ஓர் ஆவணம் இவ்வாறு கூறுகிறது " சுயெயு, ஷியங் மொழிகளைப் பேசும் திபெத்தியர்கள் மத்தியில் அறியப்படாத ஓர் இனமாகும். சுற்றியுள்ள மாவட்டங்களில் வசிக்கும் பெரும்பாலான திபெத்தியர்கள் மற்றும் சீனர்கள் இவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டதே கிடையாது. மிகவும் தூரத்தில் உள்ள இப்பகுதிக்கு இதுவரை வெளிநாட்டவர் யாரேனும் சென்றிருக்கிறார்களா என்பது அறியப்படாத காரியமாகும்"

**அடையாளம்:** சுயெயுக்கள் திபெத்திய புத்த மதத்தைப் பின்பற்றுவதை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். இருந்தும் மொழி அடிப்படையில் சுயெயுக்கள் சியங் (Qiang) சிறுபான்மையினரோடு அதிகத் தொடர்புடையவர்கள். சுயெயு மொழியில் நான்கு தொனிகள் (Tone) உள்ளன.

யாச்யாங் (Yajiang) மாவட்டத்தின் தன்சியெ (Tuanjie) பட்டணத்தில் வாழும் மக்கள் சுயெயுவை ஒத்த மொழியைப் பேசினாலும் தங்களைச் சாபா (Zhaba) என்று அழைக்கின்றனர். அதே மாகாணத்தில் சாமை (Zhamai) மாவட்டத்தில் வசிக்கும் ஷியங் பிரிவின் மற்றொரு மொழியாகிய சாபா மொழி பேசும் மக்களோடு சேர்த்து இவர்களைக் குழப்பிக்கொள்ளக்கூடாது.

**வரலாறு:** கி.பி. 1955 ல் சீன அதிகாரிகள் லீதாங் புத்த மடத் துறவிகளை மடத்தின் சொத்து மற்றும் பொருட்கள் விவரத்தை வரி மதிப்பீட்டிற்காகத் தரும்படி கேட்டபோது துறவிகள் இணங்க மறுத்துவிட்டனர். கி.பி. 1956 பிப்ரவரி மாதம் சீன இராணுவம் மடத்தை முற்றுகையிட்டது, ஆயிரக்கணக்கான துறவிகள் மற்றும் விவசாயிகள் மடத்தின் பாதுகாப்பிற்காக விவசாயக் கருவிகளோடு நின்றனர். சீன விமானங்கள் லீதாங் மற்றும் சுற்றியுள்ளப் பகுதிகளில் குண்டுகள் வீசி மடத்தை நாசமாக்கின; நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். சீற்றமடைந்த திபெத்தியர்கள் சண்டையை, சுற்றியுள்ள தேக (Dege), சந்து (Chamdo), மற்றும் பாதங் (Batang) பட்டணங்களிலும் பரவச்செய்தனர்.




**மதம்:** எல்லா சுயெயுக்களும் திபெத்திய புத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர்; இருந்தும் இவர்களது மத வழிபாடுகளில் சூனியம் மற்றும் மந்திரத்தின் காரியங்கள் கலந்துள்ளன.

**கிறிஸ்துவம்:** பிராட்டஸ்டன்ட் மற்றும் கத்தோலிக்க மிஷனெரிகள் லீதாங் பகுதியில் கி.பி. 1950 ன் ஆரம்பம்வரை பணிசெய்தனர். இந்நாள்களில் லீதாங் மாவட்டத்தில் கம்பா திபெத்தியர்கள் மத்தியில் ஒரு சிறிய பிராட்டஸ்டன்ட் சபை உள்ளது மற்றும் யாச்யாங்கில் சில கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் உண்டு. இருந்தும் இப்பகுதியின் பெரும்பாலானோர் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லை மற்றும் சுயெயுக்கள் மத்தியில் விசுவாசிகள் யாரும் கிடையாது.

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Zhaba, Hokow

**மக்கள்தொகை:** 7,000 in China (1991, Encyclopedic Dictionary of Chinese Linguistics)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங். ஷியங் மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:**100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** QEY

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்